www.tamilarangam.net

# தேனீ

ஆனி

THENEE JUNE 1990

நான் பிறந்த நாட்டினிலே
நான் இருக்க விதியில்லை;
என் ஜென்மபூமியிலே
எனக்கு உரிமையில்லை
என்றக்கால்-
வேதனைகள் முட்டாதோ!
சொல்லுங்கள் தோழர்களே
உங்களுக்கும் ஒரு நாள்
உங்களட நாட்டை
பிரிகின்ற நிலை வந்தால்
உங்களது மனநிலையில்
உவப்பா மேலோங்கும்?
இல்லை. இல்லை,
ஓர்துயர் அலை நெஞ்சில்
மேவிவருமன்றோ!



'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா, வட-கிழக்கு மாகாணசபை அமைச்சர் கிருபாகரன், யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி ஆகியோரும் இன்னும் பதின் மூன்று ஆதரவாளர்களும் பொதுமக்களும் 20.6.1990 அன்று, இந்தியாவில் புலி இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழினத்தின் விமோசனத்திற்காக தம்மை முழுமையாயக அர்ப்பணித்த தோழர்கள், மனித இனம் வெட்கித் தலை குனிய வேண்டிய முறையில் ஈனத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளதை மனிதாபிமானமுள்ள சகலரும் கண்டிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

# ரீங்காரம்

அன்பானவர்களுக்குத் தேனீயின் அன்பான வணக்கங்கள்.

இந்தியக்கடவுச்சீட்டுப்பெற்ற ஒரு இலட்ச மலையகத்தொழிலாள மக்களை இந்தியாவிற்குத் திருப்பியனுப்புவதற்கான ஆயத்தங்களை இலங்கையரசு செய்ய ஆரம்பித்திருக்கின்றது.

1964இல் சிறிமா_சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்னும் திரும்பி இந்தியாவிற்கு செல்லாத தொழிலாளர்களே இவ்விதம் திருப்பியனுப்பப்படவுள்ளார்கள்.

கடந்த பலவருடங்களாக நாட்டில் நிலவிவரும் அமைதியின்மை காரணமாக இவர்கள் திருப்பிச் செல்வதில தடங்கள் ஏற்பட்டிருந்தன.

இதில் முக்கியமானது என்னவென்றால், இவ்விதமாக இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லாததினால் இவர்களது சந்ததியினரில் பெரும்பானவர்களே இன்று திருப்பியனுப்பப்படவுள்ளார்கள்.

இந்த மக்கள் சம்பந்தமாக, இந்திய, இலங்கையரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்களிலிருந்து இன்று திருப்பியனுப்பப்படுவதுவரை இவர்களது அபிப்பிராயம் கேட்கபபடாமல் இவ்வரு அரசுகளின் விருப்பத்தின் பேரிலேயே இந்த நாடுகடத்தல்கள் நடைபெறுகின்றன.

ஆளும் வர்க்கங்களுக்குத் தேவை இந்த மக்களின் உழைப்பே தவிர அபிப்பிராயம் அல்ல.

முன்னர் ஒப்பந்தம் செய்துகொண்டபடி இந்தியாவிற்குத் திருப்பியழைக்கப்பட்ட மலையகமக்களில் ஒருபகுதியினருக்கு ஒத்துக்கொண்டபடி பராமரிப்புகளையும், புனர்வாழ்வளிக்கவும் இந்தியஅரசு தவறியதால் மொழியைத்தவிர தமிழ்நாட்டுடன் வேறெந்த பந்தத்தையும் கொண்டிராத மக்கள் அங்கும் அடிமைகளாக அலைந்தார்கள். இன்றும்கூட அங்கு திரும்பிச் செல்பவர்களுககு கொடூரமான எதிர்காலமே காத்திருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நட்டத்தில் இயங்கும் அரசதோட்டங்களை மூடிவிடுமாறு உலகவங்கி, இலங்கைஅரசைக் நிர்பந்திக்கின்றது. இவைகளை மூடும் பட்சத்திலேயே தொடர்ந்தும் கடன்களைப் பெறலாம் என்பதால் தோட்டங்களை மூடி தொழிலாளர்களை வெளியேற்றி தொடர்ந்தும் கடன்களைப் பெறவேண்டிய தேவை அரசிற்கு இன்று ஏற்பட்டுள்ளது.

எப்பொழுதோ இந்த மக்களின் அனுமதியின்றி எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தத்திற்காக இன்று அரசு நடவடிக்கையெடுப்பதற்கான பிரதான காரணிகளில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது.

தமக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தைத் தமதாக்கும் வரை மலையகமக்கள் இப்படியே காலகாலத்திற்கும் தேவையான பொழுது வைத்திருக்கவும், தூக்கியெறியவும் கூடியவர்களாகவே இருப்பார்கள்.

இந்த மக்களின் போராட்ட உணர்வுகளை விழிக்கவிடாமல் தமது 'வட்டத்'திற்குள்ளேயே அவர்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பதில் தொண்டமான்கள் அதிக கவனம் செலுத்திவருகின்றார்கள்.

மலைகளிலும், தோட்டங்களிலும், அடிமைகளாக உடலை வருத்தியுழைத்து 4 தசாப்தங்களாக 40சதவீதத்திற்கும் மேலான அந்நிய செலவாணியைப் பெற்றுக்கொடுக்கும் இவர்கள் இலங்கைப்பிரஜைகள்தான் என்பதில் இரண்டு கருத்துகளிற்கு இடமேயில்லை.

இலங்கையின் பிரஜாவுரிமைச்சட்டம் மாத்திரமின்றி நாட்டின் சரித்திரமும் மாற்றியெழுதப்படும் வரலாறு உருவாகுவது இவர்கள் உணர்வுபெற்று அணிதிரள்வதிலேயே தங்கியுள்ளது.

தமது இருப்பு மறுக்கப்படுகையில், தமது உரிமைகள் பறிபோகையில் தமது உழைப்பு உறிஞ்சப்படுகையில், உணர்வு பெற்றெழவேண்டிய பொதுவான மானுடநீதி மலையக மண்ணிலிருந்து உயிர்பெற்றெழுவது நிச்சயம்.

**தேனீக்கள்**

தேனீயில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சென்று வருகிறேன் ஜென்மபூமியே

நக்கிள்ஸின் தொடர்களை நான்
நாளெல்லாம் பார்க்கிறேன்;
'நீ பார்த்துச் சலிக்காத
பொருளென்ன' என்று நீர்
எனைக் கேட்டால்
நான் சொல்லும் பதிலிதுதான் _
'குளிர்மேகம் வாடியிடும்
நக்கிள்ஸின் தொடர்கள்தான்
நான் பார்த்துச் சலிக்காத
நல்ல பொருள்' என்பேன் நான்!

மக்களென்னும் சமுத்திரத்தில்
நானுமோர் துளி;
மனம் விட்டு நேசிக்கும்
பழக்கம் எனக்குண்டு
தாம் பிறந்த நாடுகளை
நேசிக்காத மக்களில்லை
இயற்கையெனும் பெரும் கலைஞன்
செதுக்குகிற சிற்பங்களை
ரசிக்காத கவிஞனில்லை

நக்கிள்ஸின் தொடர்களை நான்
நாளெல்லாம் பார்க்கின்றேன்
வயது ஐந்திருக்கும்;
இத்தொடரில் _
வந்து குடியேறினேனன் !
அன்றிருந்து என் கண்கள் ——
நக்கிள்ஸின் தொடர்களை
நாளெல்லாம் _
ஆயிரம் தடவைகள்
அழகுறக் காணுமே!
இருபது வருடங்கள்
ஓடி மறைந்தன; என்றாலும்
இன்றைக்கும் இத்தொடர்கள்
இதயத்தில் குளிரூட்டும் பொருளாகும்!

இந்நாட்டு மக்களை நான்
இதயத்தில் நேசித்து,
நக்கிள்ஸின் தொடர்களிலே
சில காலம்
நாளெல்லாம்
ஏறி இறங்கியுள்ளேன்
இன்றைக்கும் அந்நாட்கள்
இதயத்தில் குறுகுறுக்கும்!

நாட்கள் கழிகின்றன;
நாடுகடக்கும் வேளை
நெருங்குகின்றது;
பிரிவு என் வாசலைத்தட்டுகிறது.
பிரிவு வேதனையின் பிரதிநிதி
விழி வாசலை முட்டுகிறான்.
அழுது விடுவனோ என்ற பயம்
என்னை அமுக்குகிறது...

நம்மிணைப்பு, நம்தேசம்
நம் இயக்க விளைபொருளே;
நம் இயக்கம், நம் வர்க்க
செயல்பாட்டின் விளைபொருளே!
நாமெல்லாம் _
எங்கெங்கு இருந்தாலும்,
இதயத்தால், எடுத்த லட்சியத்தால்
உலக இயக்கமெனும் அணியினிலே
ஓர்மணியாய் தானிருப்போம்!
என்றாலும் _
நான் பிறந்த நாட்டினிலே
நான் இருக்க விதியில்லை;
என் ஜென்மபூமியிலே எனக்கு உரிமையில்லை

www.tamilarangam.net

என்றக்கால்_
வேதனைகள் முட்டாதோ!
சொல்லுங்கள் தோழர்களே
உங்களுக்கும் ஒரு நாள்
உங்களட நாட்டை
பிரிகின்ற நிலை வந்தால்
உங்களது மனநிலையில்
உவப்பா மேலோங்கும்?
இல்லை இல்லை,
ஓர்துயர அலை நெஞ்சில்
மேவிவருமன்றோ!

ஓ!
என்னருமைத் தோழர்களே!
இறுதியாக
கப்பலிலே நான் நின்று
கையசைத்து விடை சொல்லும்
போதினிலே_
என் கண்கள் மாத்திரமா?
உங்களது கண்களும்தான்
உணர்ச்சி மிக்க ஒரு பாஷையினை
வெளிப்படுத்தும் நானறிவேன்!
ஏனெனில்
என் கவிதைப் பொருள்களை நான்
இன்று பிரிகின்றேன்
இதயத்தின் சுமையோடு
தேசம் கடக்கின்றேன்.

சென்று வருகின்றேன்
மலைத் தொடர்களே;
திரும்பவும் நான் உன்னை
என்று காண்குவேனோ?
சென்று வருகிறேன்
தோழர்களே!
திரும்பவும் நாம் ஒன்றாய்
என்று மலையேறுவோமோ?
சென்று வருகின்றேன்
கொற்ற கங்கையே!
திரும்பவும் உன்மேனியில்
என்று நீராடுவேனோ?
சென்று வருகின்றேன்
வெகுஜனங்காள்;
திரும்பவும் நான் இதயமகிழ்வோடு
என்று கரம் குலுக்குவமோ?
சென்று வருகின்றேன்

வண்ணச்சிறகு

# உரிமை விலைபோனவர்கள்

அம்மா காய்கறி இல்லை
கடைக்குப் போகட்டே

'நீயேன் போகவேணும்
விலைப்படுகிற பெண்ணல்லே
பெட்டையை அனுப்பு பிள்ளை

தங்கச்சி சொன்னது
கேட்டுதே பெட்டை
கடைக்குப் போய்
காய்கறி வாங்கி வாடி

சட்டையிலை கிழியல்
சரிசெய்யாத்தலைமயிர்
கரிபுரண்ட பாவாடை
கழுவுவதற்கு நேரமில்லை
கடைக்குப் போய்வருவாள்
உரிமை
விலைபோன பெண் அவள்.

ஜீவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சுபொறுக்குதில்லையே

இன்று வாய்திறவாதே
மௌனம் கொள்.
இன்று மட்டும்.
நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கிற
காலம் ஒன்று வருமோ?

என்ற சேரனின் கவிதைவரிகளின் கேள்விக்கு சாட்சியமாக இன்றும் நிலவும் யாதார்த்தநிலமைகள் திகழ்கின்றன. மககளுக்காக ஒரு விடிவைத் தேடி புறப்பட்டவர்கள் துப்பாக்கிகளை, காலப்போக்கில் மக்கள் பக்கமும், உண்மைகளை எடுத்துரைப்பவர்கள் பக்கமும் நீட்டத்தொடங்கியதன் விளைவாக மக்களின் வாய்கள் பலவந்தமாக மௌனமாக்கப்பட்டன.

ஒவ்வொரு குறிப்பட்ட காலத்தின் வளர்ச்சியையும், போராட்ட நிலைமைகளையும் எடுத்துக்காட்டுபவையாக இருப்பவை அக்காலங்களில் வெளியாகும் எழுத்துருவங்களே. அவை பத்திரிகையாகவிருக்கட்டும், அல்லது சஞ்சிகையாகவிருக்கட்டும் தமது கருத்துக்களை வெளிப்படையாக எழுதுவதற்கு அவைகளுக்கு முழுச்சுதந்திரம் இருக்கவேண்டும். துப்பாக்கிகள் முன்னேயிருக்கும்போது எந்த பேனாக்களும் சுதந்திரமாக எழுதமாட்டா.

பலகாலமாகவே நமது நாட்டில் பத்ரிகைச் சுதந் திரம் என்பது ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளேயே அடக்கப்பட்டிருக்கின்றது.

உண்மைகளை எழுதியவர்கள், விமர்சித்தவர்கள், பேசியவர்கள் ஆயுதங்களால் நீர்மூலமாக்கப்பட்டனர். ஒருபகுதியினர் அன்னியநாடுகளில் தஞ்சம்புகுந்தனர். பத்திரிகை அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அச்சு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. தாம் சொல்பவற்றை மட்டும் எழுதுவதற்காக பத்திரிகைகள், எழுத்தாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் என்பது நமது மண்ணில் இன்னும் கானல்நீராகவேயுள்ளது.

சொந்தநாட்டில் விழுந்திருக்கும் இடைவெளியை நிரப்புவதற்காக வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்துள்ள தமிழர்களின் முயற்சிகளால் சில தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவரத்தொடங்கின. ஆரம்பத்தில் இவர்களுக்கு தங்கள் கருத்துக்களைத் துணிந்து வெளியிட ஓரளவேனும் சுதந்திரமிருந்தது. காலம் செல்லசெல்ல இங்கும் தடைக்கற்களையிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படத்தொடங்கின.

அண்மையில் கூட கனடாவிலிருந்து வெளியாகும் "தாயகம்" பத்திரிகையை தடைசெய்தது முதல் பிரான்ஸில் சஞ்சிகையாசிரியர் ஒருவர் தாக்கப்பட்டது வரை தொடர்கிறன. எந்த நாட்டிற்குச் சென்றாலும் உண்மையை பகிரங்கமாக எடுத்துரைக்கும் சுதந்திரம் இல்லையானால், "நாம் மக்களுக்கு ஒரு விடிவைத்தருவோம்" என பிதற்றுவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை.

இத்தகைய செயல்களுக்கு பத்திரிகைகள் என்ற முறையில் சகலரும் குரல்கொடுக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கின்றது.

ஊர்க்குருவி

www.tamilarangam.net

# போராடு

சற்று
கால்களை
நீட்டி
முன்னிருக்கைப்
பெண்ணை
உரசியபடியும்
நெருசலான
பிரயாணத்தில்
நெரித்தும்
தேய்த்தும்
வெறித்தும்
வெறிதீர்க்கும்
அவலம்

வித விதமானவற்றை
வித்தியாசமாக
அனுபவித்தும்
வெறி அடங்காது
அடுத்தவன்
மனுசியென்றாலும்
அர்த்த ராத்திரியில்

அநாமதேயமாக
அழைத்து
அற்ப
ஆசைகளை
தீர்க்கின்ற
அவலம்

கல்லாக
கற்பனையான
கற்பு
காக்கப்படவேண்டும்
என்பதற்காய்

பத்திரமாக
தொடரும்
இச் சித்திரவதைகள்

பொறுமை
எனும்



பொய்மை
திரையினை
போதும்
என்று
அகற்றிவிட்டு
பொதுவான
நீதிக்காக
போராடு

பாமினி

- உலகின் வேலைநேரத்தின் [illegible] இரண்டு பகுதி நேரம் பெண்கள் வேலை செய்கின்றனர். ஆனால் உலகின் மொத்த வருமானத்தில் பத்தில் ஒன்றையே பெறுகின்றனர்.
- ஐக்கிய அமெரிக்காவில் ஆணுக்கு ஒரு டொலர் சம்பளமாயின் பெண்ணுக்கு அறுபது சதமே கிடைக்கிறது.
- இங்கிலாந்தில் ஆண்களை விடப் பெண்களுக்கு 25% குறைவாகவே சம்பளம் வழங்கப்படுகிறது.
- தென் கொரியாவில் ஒரு மாதத்திற்கு 42 டொலருக்குக் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களில் எண்பது வீதமானோர் பெண்களே. இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒரு நாளைக்கு 8 — 10 மணித்தியாலங்களும் மூன்றில் ஒரு பகுதியினர் 15 மணித்தியாலங்களும் வேலை செய்கின்றனர்.
- இலங்கையின் நெல் உற்பத்தி மாவட்டங்களில் விவசாய வேலைகட்கு ஆண்கள் பெறும் சம்பளத்திலும் 38% குறைவாகவே பெ[illegible]கள் சம்பளம் பெறுகி[illegible]றனர்.

**பெண்ணின்குரல் சஞ்சிகையிலிருந்து...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாறுதல் ஒன்றே மாறுதது

**கிழக்கைரோப்பாவில் நிகழும் அரசியல்மாற்றங்கள் பற்றி 'இந்தியா டுடே' யில் வெளியான அதன் நிருபரொருவரின் கட்டுரைக்கு பதிலளிக்கும் முகமாக இன்குலாப்பினால் எழுதப்பட்ட இக்கட்டுரையை இந்தியாவிலிருந்து வெளியாகும் 'நக்கிரன்'சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் பிரசுரிக்கின்றோம்.**

## *இந்தியா டுடே (மார்ச் 6-20, 1990) இதழில்*

மாஸ்கோவிலிருந்து கிழக்கு ஜெர்மன் வரை மேற்கொண்ட பயணத்தில் அவர் கண்ட நிகழ்ச்சிச் சித்திரங்களை அவருக்கே உரிய பரபரப்பான சொற்களில் தருகிறார். எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கும் மக்களைப் பற்றிச் சொல்லித் தொடங்குகிறார். எந்த முதலாளிய ஆதரவாளனும் சோசலிஸ நாடுகளைப் பற்றி கண்டனம் செய்யவரும் பொழுது முதன் முதலாகத் தொடங்குவது இந்த வரிசை விவகாரத்திலிருந்துதான். இது நாம் கேட்டுச் சலித்துப் போன குற்றச்சாட்டு. அதே சமயத்தில் இக்குற்றச்சாட்டு முதலாளிய மனப்பான்மையையும் காட்டுகிறது. அதாவது பற்றாக்குறையில் இருக்கும் ஒரு பொருள் அனைவருக்கும் உரிய வகையில் இடப்படுவதை எதிர்க்கும் மனோபாவம் அது; மற்றவர்களுக்கு எது கிடைக்கிறதோ இல்லையோ தானே அனைத்தையும் உடமையாக்கிக் கொள்ள வேண்டும் என்கிற மனோபாவம்; அது தனக்கு முந்தி எவர் வந்த போதிலும் தானே அனைத்துக்கும் முந்திச் செல்வது என்ற மனோபாவம் அது. சமூக உணர்வுகளை மதிக்காத தனி மனித அகந்தையின் வெளிப்பாடு அது. ஆயினும் இந்தியா டுடே சீமான்களுக்கு இத்தகைய காத்திருத்தல்களும், வரிசையில் நிற்பதும் அவமானந்தரக்கூடிய நிகழ்ச்சிகளாகும். சாதாரண மக்களுடன் வரிசையில் நிற்பது அவர்களின் தகுதிக்குக் குறைவானது.

வரிசையில் நிற்கும் மக்களுடைய தாகம் எப்படிப்பட்டது? மேற்கண்ட இதழ் விளக்குகிறது:

இந்தியர்களுக்குப் பழக்கமான அடிபட்டுக் காய்த்துப் போன வறுமை, பற்றாக்குறை, குறைந்த போஷாக்கு இவற்றின் சித்திரங்கள் அல்ல. சாதாரணமான பொருட்கள் - தரமான சிகரெட், நல்ல காபி, டீ, மது, மட்டனின் செழுமையான பகுதி, நம்பகமான மருந்துகள், அயல் நாடுகளில் சுலபமாக மாற்றக் கூடிய கரன்சி போன்றவற்றிற்கு அடித்துக் கொண்டு பாயும் தாகம், - இவற்றிற்கு நடுவில் அவர்கள் உணர்ச்சிப் பொங்கிப் பீறிட ஜனநாயகத்திற்கு விழா எடுக்கிறார்கள்.

இந்தக் கூற்றை ஆழ்ந்து நோக்கினாலே இந்தப் பத்திரிகையாளர்கள் ஜனநாயகத்துக்கென்று எவற்றையெல்லாம் முன்னிலைப் படுத்துகிறார்கள் என்பது தெளிவாகப் புரிந்துவிடும். இன்று சோவியத் ருஷ்யா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பியர்கள் முன்வைக்கும் கோரிக்கை இதுதான். "எங்களுடைய அளவற்ற நுகர்ச்சிகளுக்கு வடிகால் வேண்டும்" என்பதுதான். அங்கு வரிசை காண்பது 'காய்த்துப் போன வறுமை' அன்று; சில நியாயமான தேவைகளுடன், பல ஆடம்பர நுகர்ச்சிக்கான தேவைகளும் கூட அதற்குச் சோசலிஸ வாழ்க்கை முறை உகந்ததாய் இல்லை. எனவே தூக்கியெறிந்து விட முன்னிற்கிறார்கள்.

கிழக்கு ஜெர்மனியில், "போன நவம்பர் வரை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தவர் சோசலிஸம் பற்றி என்ன நினைக்கிறார்? "அதுல நல்லது நெறைய இருக்கணும். உதாரணமா எங்க மத்தியிலே வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லே. ஆனா மேற்கு ஜெர்மனிலே வேலை இல்லாதவங்களுக்கு கிடைக்கிற உதவி நிதி, எங்களுக்குக் கிடைக்கிற ஊதியத்தை விட அதிகம்கிறதைப் பார்க்கும் போதுதான் அமைப்பு சரிதானான்னு கேள்வி ஆரம்பிக்குது."

கிழக்கு ஜெர்மனியின் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தவர், அடிப்படையில், ஜனநாயகம் என்பதை முன்னிறுத்தி வேண்டுவதெல்லாம் பொருளாதார மேம்பாடுதான், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு, இப்படி வேலையில்லாமல் இருப்போருக்கெல்லாம் கொடுக்கும் இவ்வளவு பெரிய உதவித் தொகைக்கு மூலமான செல்வ வளம் எங்கிருந்து வந்தது? இதை அந்தக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராயிருந்தவர் கேட்டிருக்க வேண்டும். மேற்கு ஜெர்மனியின் செல்வத்துக்கு மூலகாரணம் எது? மேற்கு ஜெர்மனியின் மண் மட்டுமா? அல்லது அந்நாட்டு மக்களது அயராத உழைப்பு மட்டுமா?

இன்று மூன்றாம் உலக நாடுகளை எந்தவிதமான அறநெறி ஒழுக்கமுமின்றிக் கொள்ளையடிக்கும் முதலாளிய நாடுகளில் மேற்கு ஜெர்மனியும் ஒன்று. அதற்குக் கிடைக்கும் மிகை வருவாயின் பெரும் பகுதி அந்நாட்டின் எல்லைகளுக்குள் திரட்டப்பட்டதில்லை. மேற்கு ஜெர்மனி மட்டுமின்றி, பல முதலாளிய நாடுகளும் செல்வத்தில் மிதப்பதற்கு இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் உழைப்பும் வளமுந்தான் காரணம். முதலாளியத்தின் ஆதரவாளன் எவனும் இந்த உண்மையைச் சொல்வது இல்லை. ஏதோ முதலாளியத்துக்கு வானம் பிய்த்துக் கொண்டு டாலராகக் கொட்டுகிறது என்ற ஒரு பொய்மையைத்தான் முதலாளிய ஆதரவாளர்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு ஐரோப்பிய மக்கள் முதலாளிய நுகர்ச்சிக்காக முதலாளிய ஜனநாயகத்தைக் கோருவார்களேயானால், அது அவர்களுடைய சொந்த விவகாரமாக இருக்கலாம்; ஆனால் அதற்கு விலை தர வேண்டியவர்கள் ஆசிய ஆப்பிரிக்க இனத்தின் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த ஏழை எளிய உழைக்கும் மக்கள்தாம். ஏனெனில் இந்த மூன்றாம் உல்க நாட்டு மக்களின் மீது தொடுக்கப்படும் வரம்பற்ற சுரண்டல் தாக்குதல்களால்தான் ஏகாதிபத்தியங்களும், முதலாளிய நாடுகளும் கொழுத்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய உலகக் கொள்ளையில் இப்போது கிழக்கு ஐரோப்பிய, சோவியத் ருஷ்ய மக்களும் பங்கு கேட்க முன்வந்து விட்டார்கள்; சோசலிஸ; கம்யூனிசக் கோட்பாடுகளைத் தூக்கி எறியப் போகிறோம் என்று கூறுவதற்கு இதைவிட வேறு எந்த நோக்கமும் இருக்க முடியாது.

இத்தகைய கோரிக்கைகள்தான் அம்மக்களுடைய முழுமையான கோரிக்கைகளா என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இங்குள்ள தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் போன்றவை, பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதையும், மக்கள் அணி அணியாக மேற்கு ஜெர்மனி நோக்கி ஓடியதையும் பெரிதுபடுத்திக் காட்டினார்கள். ஆனால் சென்ற மக்களில் பெரும்பான்மையினர் திரும்பிவந்தார்கள் என்ற செய்திகளைப் பெரிதுபடுத்தவில்லை: ஆகையால் அந்த நாடுகளின் மக்களுடைய கோரிக்கைகளின் சரி தவறு குறித்துவிரைவாய் ஒரு முடிவுக்கு வரவேண்டியதில்லை. ஆனால், வெறும் ஆடம்பர நுகர்ச்சி மட்டுந்தான் அவர்களது தேவையாக இருந்து, அதற்காக அவர்கள் சோசலிஸ அமைப்பு முறையைத் தூக்கி வீச முன்வருவார்களேயானால், அவர்களை உலகக் கொள்ளைக்காரர்களின் பட்டியலில் சேர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'சோசலிஸ நாடுகளில்' நடக்கும் சீரழிவுகளைச் சுட்டிக்காட்டும் இந்த இதழ்கள் முதலாளிய நாடுகளின் மேன்மையைச் சுட்டிக் காட்ட முன்வருவார்களா! கொழும்பிலிருந்து வெளியிடப்படும் 'குமரன்' என்ற தமிழ் இதழ் (நவம்பர் 1989) அமெரிக்காவின் நிலைமை இவ்வாறு படம் பிடிக்கிறது.

'...அமெரிக்க ஏழைகளான 20% மக்களின் வருமானம் 1979-87 காலப் பகுதியில் 6.1% வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளை மேல் மட்டத்திலுள்ளவரின் குடும்ப வருமானம் 11.1% அதிகரித்துள்ளது. இவையும், பிற தரவுகளும் நாட்டின் ஜனநாயக நலனைப் பாதிப்ப தாக உள்ளன. (நியூயார்க் டைம்ஸ், 22.3.89) "இந்த சகாப்தத்தில் உள்நாட்டின் வறுமையையும் பசிக் கொடுமையையும் மக்களின் துன்பத்தையும் அனைவரும் அறிவர்... அண்மைய பொருளாதார மீட்சி, பசிப் பிணியிலுள்ள இரண்டு கோடி மக்களின் துன்பத்தைப் போக்குவதாக இல்லை. 1980-இன் பின்னர் ஏற்பட்ட தொழில் வாய்ப்புகள் குடும்பங்களின் வறுமையைத் துடைப்பதாக இல்லை.



கூலி உழைபபின் வீழ்ச்சி வெள்ளையரை மட்டுமல்ல - அனைவரையும் பாதித்துள்ளது...

'ஜனநாயகத்தின்' ஆலயமாகச் சித்தரிக்கப்படும் அமெரிக்க மக்களின் நிலை இது. அதனுடைய புகழ் பெற்ற நியூயார்க் நகரம் எந்த நிலையில் உளளது? "குமரன்" இதழ், (ஜனவரி 1990) அந் நகரம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் நரகமாய் மாறிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை வெளியிடுகிறது. வன்முறை, விபசாரம், போதை எல்லாவற்றுக்கும் இந்த முதலாளிய நகரம் முன்னோடியாகிக் கொண்டிருக்கிறது. சராசரி ஒரு நாளைக்கு 5.4 பேர் இந்நகரில் கொலை செய்யப்படுகின்றனர். வீதிகளிலே வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கை குறைந்தது 25,000-30,000 ஆகும். கற்பழிப்புக்களின் எண்ணிக்கை 2,141-லிருந்து, 3412-ஆக அதாவது 5% வீதம் அதிகரித்துள்ளது. 1970-இல் போதைப் பொருள் பயன்படுத்தியதாக 52,740 பேர் கைது செய்யப்பட்டனர். 1988-இல் அத்தொகை 88,642 பேராக அதாவது 6% வீதம் அதிகரித்துள்ளது. இப்படி எத்திசையும் புகழ் மணக்கும் நியூயார்க் நகரின் நிலை பற்றி அந்த இலங்கை ஏடு செய்தி வெளியிடுகிறது. ஆயினும் இங்குள்ள மாபெரும் ஏடுகள் இன்று சோவியத், சோசலிஸ நாடுகளின் சீரழிவை மட்டுமே சித்தரிக்கின்றன. இப்படிப்பட்ட அம்பலப் படுத்துதல்கள் முதலாளிய நாடுகளையும் தழுவியதாக இருக்க வேண்டும் என்பதை மட்டுமே நான் இங்கு வற்புறுத்துகிறேன்.

சோசலிஸ முகாம்களிலுள்ள மக்களுக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள அமெரிக்காவும், மேற்கு ஜேர் மனியும் முன்னுதாரணங்களாக எப்படி ஆக முடியும்? ஒருவேளை மேற்கண்ட நாடுகள், முழுமையான சோசலிஸ வாழ்க்கை முறையை தூக்கி எறிவார்களேயானால், இந்தியா போன்ற மூன் றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நாம் அந்நாடுகளைப் பின்பற்றி விடக் கூடாது. ஏனெனில் முன்னரே குறித்தது போல் அவர்கள் உலக முதலாளியக் கொள்ளைக்காரர்களின் பங்காளிகளாக விரும்பு கிறார்கள். அதனால் அவர்களுடன் நமக்குத் தோழமை பாராட்ட எதுவுமில்லை.

ஆனால் இங்குள்ள தகவல் தொடர்புச் சாதனங்கள், சோவியத் திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும் நடைபெறும் போராட்டங்களின் பகுதி உண்மைகளை மட்டுமே வெளியிடு வதற்கு என்ன காரணம்? ஏனெனில் இன்று மூன்றாம் உலக நாடு களின் உயிர்ப்பே சோசலிஸத்தைச் சாதிப்பதில்தான் அடங்கி யுள்ளது. இந்தச் சோசலிஸப் போரில் இந்தியா உள்ளிட்ட மூன் றாம் உலக நாடுகள் வெற்றி பெறுவார்களேயானால் அது அமெ ரிக்கா போன்ற பெருமுதலாளிய நாடுகளிலும் சோசலிஸப் போராட்டத்தைத் தோற்றுவிக்கும், அமெரிக்கா போன்ற நாடு களின் செல்வ வளத்துக்குக் காரணமான மூன்றாம் உலக மக்களின் சோசலிஸ போராட்டத்தில் பெறும் வெற்றியானது உலகச் சுரண் டலை தகர்த்து நொறுக்கிவிடும். அப்பொழுது அமெரிக்கா போன்ற நாடுகளின் மக்கள் முதலாளிய ஜனநாயக மாயையி லிருந்து விடுபட்டு உண்மையான ஜனநாயகத்தைப் பாதைக்குத் திரும்புவார்கள். முதலாளியப் பொருளாதாரத்திலிருந்து மீண்டும் சோசலிஸ பொருளாதார முறைக்குத் திரும்புவார்கள். இப்படி ஒரு நிலை தங்கள் முதலாளிய அரசுகளுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இங்குள்ள முதலாளியத்தின் எழுத்து எடுபிடிகள் கவன மாக இருக்கிறார்கள். அதனால் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத் திக் கொண்டு பொதுமைக் கோட்பாடுகளின் பால் மக்களுக்கு வெறுப்பேற்படுத்த முயல்கிறார்கள்.

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நாம், முதலாளிய நாடுகளுக்கும், அவர்களைத் தழுவத் துடிக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சொல்வோம்.

நல்லது! பெர்லின் சுவர் உட்பட அனைத்தையும் உடைத்தெறி யுங்கள். லெனினின் உடலைப் புதையுங்கள். சிலைகளைத் தூர எறி யுங்கள். இவற்றால் எல்லாம் நீங்கள் குற்றம் புரிந்தவர் ஆக மாட் டீர்கள். ஏனெனில் இத்தகைய சுவர்களுக்கும் கம்யூனிசத்துக்கும் தொடர்பில்லை. லெனினுடைய உடலுக்கோ, சிலைக்கோ மரி யாதை செய்வது கம்யூனிசமல்ல.

மாறாக உலக மானுடத்தின் விடுதலைக்குப் போராடுவதுதான் கம்யூனிசத்தின் சாராம்சம். அனைத்து தளைகளிலிருந்தும் மானுடம் விடுதலை பெறுவதுதான் கம்யூனிசத்தின் வெற்றி. இந்த மாபெரும் குறிக்கோளுக்குக் குறுக்கே வருவீர்களேயானால், நீங்களும் எங்கள் எதிரிகளாவதைத் தவிர வேறு வழியில்லை. உங்களுடைய தேவைகளை எங்கள் மீது நடத்தும் சுரண்டல்களின் மூலம் நிறைவு செய்வீர்களேயானால் உங்களையும் தூக்கி எறிவதைத் தவிர வேறு வழியில்லை.

22 பக்கம் பார்க்க

**மலையக மக்களுக்கு உரிமையில்லையெனக்கூற இந்தநாட்டில் ஒருவருக்கும் உரிமை இல்லை.**

**.....வீரகேசரியில் தொண்டமான்**

**அந்த உரிமை மலையகமக்களுக்கும் இல்லையென்று நீங்கள் மறைமுகமாகச் சொல்லுறது வடிவாக விளங்குது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்னராசா

அந்த விடுதியில் வசிக்கும் இளைஞர்களைப் போல், சின்னராசா'வும் ஒரு இலங்கைப் பிரஜை! ஆனால், மற்றவர்களுக்கும், அவனுக்கும் நீண்ட இடைவெளி. வெளியுலகப் பிரக்ஞையில்; நடையுடை பாவனையில்; உணவில்; இயற்கையைப்புரிந்து கொள்வதில் ஜெர்மனிக்கு வந்து அஞ்ஞாதவாசம் புரியும் தமிழ் இளைஞர்களில் இவனும் ஒருவன். காலத்தின் கோலத்தால், இலங்கையை விட்டு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்டான் ஜெர்மனிக்கு.

சதா விடுதியிலிருக்கும் சின்னராசாவுக்கு அன்று, மனவுளைச்சல். இதனால் சற்று வெளியில் சென்று உலாவிவிட்டு வரவேண்டும்போல் தோன்றியது அவனுக்கு.

குளிர்காலமின்றி, வெயிற்காலமாக இருந்தால் நினைத்த நிமிடமே வெளியில் செல்ல மனமிசைந்தது. குளிர்காலமாக இருக்குமானால், உடம்புக்கு முடிந்தாலும் மனதுக்கு முடியாது! சூரியன் தன், ஆற்றல்கள் யாவையும் சேர்த்து அன்று வெளிப்படுத்திக்கொண்டான். இலங்கையில், ஆடிமாதத்தில் வெயிலின் கொடுமை எப்படியோ, அப்படியிருந்தது அன்றைய பொழுது! கொர்ப்பச்சோவின், பெரெஸ்ரொய்கா 'வைக் கையில் எடுத்துக்கொண்டான், டொச் மொழிப்பெயர்ப்பில் அழகாக அச்சிட்டு நூலாக்கியிருந்தார்கள். புத்தகத்தை விரித்து, அங்கொன்றும் - இங்கொன்றுமாகப் பந்திகளைப் பார்வையிட்டான். பின்பு, நகரப் பார்க்கை(Stadtpark) நோக்கி நடக்கலானான்.

அவன், வசிக்கும் அந்த விடுதியின் மேல்மாடியிலிருக்கும் சில தமிழ் இளைஞர்கள் சின்னராசா புத்தகமும் கையுமாகச் செல்வதைப் பார்த்து, பலவிதமாக எள்ளிநகையாடினார்கள்.

"பாராடா மச்சான்! சோக்கரடல், பாக்குக்கு போகிறார்... அவற்றை நடையும்... பார்வையும்... ஊம்"

"டேய் கணேஸ்! பின்ன உன்னைப்போல முட்டாளாய் இருக்கச்சொல்லுறியோ? அவன், படிச்சவன்; நாட்டைப்பற்றியும், மக்களைப்பற்றியும் சிந்திப்பவன்; தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தைப்பற்றிய உண்மைகளை அறிய முற்படுபவன். அவனைப் பார்த்து கேலி செய்ய உனக்கு எந்த அருகதையும் கிடையாது." தவம், சின்னராசாவுக்காக கணேசுடன் மல்லுக்கட்டினான். மேல் மாடியிலிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் சின்னராசாவைப் பற்றி பல மாதிரி விவாதித்தார்கள்.

"காலை எழுந்ததும் வேலைக்கு போவதும், பிறகு, வேலை முடிந்ததும் நேராக விடுதிக்கும்... ஆட்டு மந்தைகளின் செயற்பாடுகூட சற்றுமாறுபட்டுச் செல்லும். உண்பதும், உறங்குவதும், வேலைக்குப் போவதும்தாம் இவர்களது வாழ்க்கை. சதாவேலையைப்பற்றிச் சிந்திப்பதும்; அடுத்தவன் வீட்டுக்கதைகளை மற்றவனுக்கு கூறுவதும்; மாற்றான் பெண்டாட்டியைப் பார்த்து இச்சை கொள்வதும் தாம் இவர்களுக்கு வாழ்க்கை. இந்த வகைச் சிந்தனைகளும், எண்ணங்களும்தாம் பிரபஞ்சத்தின் எல்லையென்று எண்ணும் நாங்கள் இலங்கையைவிட்டு ஜேர்மனி வந்தாலும் வந்தம்... நிறைய கற்றுக்கொண்டுவிட்டம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குமரேசன் தனக்குள் அலுத்துக் கொண்டான்.

"என்ராப்பா! உனக்குள் என்ன புறுபுறுக்கிறாய்?" குமரேசனைப் பார்த்து கணேஸ்.

கணேஸ்! என்னதான் இருந்தாலும் மற்றவனை, கேலி செய்றதை கொஞ்சம் தவிர்க்கவேண்டும்."

"மச்சான் டேய் குமரா! சும்மா தமாசுக்கு சொன்னால் நீ ஏன்டாப்பா கோவிக்கிறாய்? அதுசரி, சின்னராசாவைப்பற்றிப் பகிடி பண்ணால் உனக்கென்ன? உன்ர தங்கச்சிக்குப் பார்த்திட்டாய்போல இருக்கு?" மீண்டும் கணேஸ் தன் சுயத்தை வெளிப்படுத்தினான்.

"மன்னிச்சுக்க கணேஸ்! உன்னோட பேசினதுக்கு எனக்கு இது வேணும்" குமரேசன், கதவை அடித்துச் சாத்திக்கொண்டு தனது அறைக்குள் நுழைந்தான்.

* *

சிற்னராசா, பைன் மரத்தின் கீழ் அதன் நிழலை அனுபவித்தபடி ஆகாயத்தை பார்த்துக்கொண்டு மல்லாந்து கிடந்தான். அவன், கையை விட்டு நழுவி பொரோல்றோய்கா, தரையில் கிடந்தது. ஆயினும், இன்று அவனது சிந்தையில் பிரபஞ்சத்தைப் பற்றிய பலவித கற்பனைகள்-- கேள்விகள் ஊற்றெடுத்தன.

" வாயேஜர்-2(Voyager-2) நெப்டியூனைச் சென்று செய்தி அனுப்பி இருக்கு... நியூஸ்வீக் மகசீன் படத்தோட கட்டுரை போட்டிருக்கு ஊம்... நான் இங்கிலீசில படிக்காம தமிழில் படிச்சதால அந்தக் கட்டுரை சரியாக விளங்கயில்லை... என்டாலும் டொச் பேப்பரில பாத்து புரிந்துகொண்டாச்சுதானே?

## கவிதாஞ்சலி

என்னத்தை புரிஞ்சுது... தாய்மொழியில் படிக்கிற சுகம் இதில் இருந்துதா? இல்லையே! ஏதோ, கரடுமுரடாய் இருக்குது அவங்கட விளக்கம். என்ன இருந்தாலும் நான் தமிழனாகப் பிறந்திருக்கக்கூடாது! ஊம்... இண்டைக்கு ஏன் இப்படி யோசிக்கிறன்... இங்கிலீசுக்காரன் கண்டு பிடிப்பதை உடனே டொச்சுக்காரன் மொழிப்பெயர்க்கிறான்; டொச்சுக்காரன் கண்டு பிடிப்பதை இங்கிலீசுக்காரன் மொழிப்பெயர்க்கிறான்... ஆனால் எங்கட மொழியில இந்த அறிவு சம்பந்தமாக எதுவும் கெதியில வராது... அப்படி வருவதெண்டாலும்... ஆறிப்போய்த்தான் வரும். சூட்டோடு வருவது கிடையாது. கொம்பியூட்டர் இண்டைக்கு "அனாலக்"கென்றும் "டிஜிட்டல்" என்றும் பலவித முறைகளில் முன்னேறிவிட்டது. ஆனால் நாம... இன்னும் கொம்பியூட்டரையே வடிவாக மொழிபெயர்க்கவில்லையே...!; இலங்கையில் கணனி, என்டு சொல்லுகிறோம்... தமிழ்நாட்டில் கணிப்பொறி என்டு சொல்கிறார்கள். இதில எதுதான் சரி...? அறிவியல் சம்பந்தப்பட்ட விஷயத்தில்கூட ஒற்றுமையாக நம்மால் செயல்படமுடியவில்லை.

ஐயோ இயற்கையே! இந்தப் பிரபஞ்சத்தில் எங்கயாவது உயிரினம் வாழுதா?... பூமியைப்போல அங்கேயும் மனுஷர்கள் இருப்பார்களோ? நெப்டியூன் ஒரு வாயுக்கோளமாமே... அதில் "கீலியம்" நிறைய இருக்கெண்டு விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்... சூரிய குடும்பத்தின் கோள்களில் பூமியில் மட்டும்தாம் மனிதர்களும், மற்றைய உயிரினமும் உண்டாம்... அப்ப மற்றக் கோள் ஆராய்ச்சியெல்லாம் வீண்தானா?... இதற்கு செலவுபண்ணும் பணமும் வீண்தானோ? சீச்சீ... இன்னும் பல சூரியக்குடும்பம் இருக்காமே... அங்கெல்லாம் உயிரினம் இருந்திட்டால்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவேளை அப்படி இருந்திட்டாலும் பூமியில் இருக்கிற மாதிரி சஞ்சலமில்லாம இருக்கவேண்டும். அப்பப்பா... பூமியில மனிதனா வாழுகிறான்...? மிருகத்தனமாய் போயிட்டுது மனிதவாழ்க்கை. சீ...ஈ... ஏய் மரமே! நீ கூட என்னை வெறுக்கிறாயா? " காற்றின் அசைவால் "பைன் மரத்தின்" பழுத்த இலைகள் உதிர்ந்து சின்னராசாவின் முகத்தில் விழுந்துவிட்டன. அதனால், அவனது கற்பனை வாழ்வு தடைப்பட்டுவிட ஆத்திரத்தால் மரத்திடம் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டான், சின்னராசா.

பையின் மரத்தையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தவனின் பார்வையில், மரத்தின்கிளைகள் காற்றினால் மேல்நோக்கியும், கீழ்நோக்கியும் விரிந்தாடியது, பட்டது.

அந்த நிகழ்வு, மாற்றான் மடியில் இருக்கும் குழந்தை தாயைக் கண்டதும் 'கள்ளம் கபடமற்ற சிரிப்புடன், கை'யைத் தூக்கி தாயிடம் தாவச் செல்லுமே... அதுபோல இருந்தது, சின்னராசாவுக்கு. இதனால், அவனுக்கு 'தன்னில், ஒரு கர்வம் வந்தது; தன்னைப் பார்த்து மரங்கள் கூட மகிழ்ச்சியடைவதாகக் கருதிக்கொண்டான்.

"டேய்! என்ராப்பா சின்னராசா, பொறொல்ரோக்காயை புரட்டிப் புரட்டிப் பார்த்துகீகொண்டிருக்கிறாய்? ஏதாவது, பிழையாக கொர்பச்சேவ் எழுதிவிட்டுட்டாரோ?" குமரேசன் ஆர்வத்துடன் கேட்டான்.

"மச்சான்! டேய் குமரா களைப்பாய் இருக்கடாப்பா "

"அடிசக்க. நீங்க பாக்கெண்டும், கிளப்பெண்டும் சுத்திப்போட்டு வருவீங்க... உங்களுக்கு பொண்டாட்டி மாதிரிநான் சேத்தண்ணி ஊத்தித்தரவேண்டும்?... நல்ல கதை... காலகாலத்துக்கு அம்மாவுக்குக் கடிதம் எழுதி ஒரு பெண்டாட்டியைக் கூப்பிடு" குமரேசன் தன் நிலைப்பாட்டை விளக்கினான்.

"என்னடா! பெரிசா லெக்சர் அடிக்கிறாய்... உன்னால முடியாட்டி விடன். ரூமேட்டென்றால் அப்பிடி, இப்பிடி உதவி செய்யிறது வழமை... அன்பிருந்தால் செய்யலாம்"

"ஓமடா மச்சான்! நீ சொல்றது ரொம்பக் கரக்ட் இப்படிக்கூறிக்ககாணடு சின்னராசா தவம், இருவரின் ரூமுக்குள் நுழைந்தான் தவம்.

"ஓய்...! நீயென்னகாணும கரக்ட் புரட் எண்டு ஒத்தூதுகிறாய'

இது குமரேசன்.

"என்ரப்பா! நண்பர்களெண்டால் கூடமாட உதவி செய்யத்தானேவேண்டும்?" என்று கூறிக்கொண்டு தவம் சின்னராசாவைப்பார்த்தான். சின்னராசா பொறோல்ரோறோக்காயில் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தான்.

"என்ன மச்சான் சின்னராசா! பெறோல்றோக்காய் என்னடாப்பா சொல்லுகிறது? கிழக்கு ஐரோப்பாவையும், முழுமுதலாளித்துவ நாடுகளையும் கவர்ந்துவிட்ட புத்தகத்தைப்பற்றி என்ன நினைக்கிறாய்? குமரேசன் மீண்டும் ஆர்வமாகக்கேட்டான்.

"தவம்! டேய்... இவனைக் கூட்டிக்கொண்டு வெளியால போடா. இவனுக்கு, அதைப்பற்றிச் சொன்னாலும் விளங்காது; விளங்காமல் போனாலும் இவன் விடமாட்டான்; என்னால இப்ப இதை விளங்கப்படுத்தவும் முடியாது. ஒரே களைப்பாய் இருக்கு."

"உம்... இவர் பெரிய மார்க்ஸிலை-லெனினிலை தத்துவ வித்தகர்... எனக்கு விளங்காதெண்டு இவருக்கு எப்படித் தெரியும்? நானும் இலங்கையில் அரசியல் விஞ்ஞானம்தான் படிச்சனான்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குமரேசன் தன், வரலாறுகளை எடுத்து விளாசித்தள்ளிறான். பிறகு சொன்னான், "இவர்களெல்லாம், வெறும் கதிரைப் புரட்சிக்காரர்கள்; நான் அப்படியில்லை.... இவர்களுக்கும் ஒரு எண்ணம்தான் தாங்களும் புரட்சிக்காரர் எண்டு... உண்மையான புரட்சிக்காரன் மற்றவனை மூடன் எண்டு நினைக்கமாட்டான்."

என்று சொன்ன குமரேசன் மீண்டும் தொடர்ந்தான். "பாழாய்ப்போன தமிழைப் படிச்சதால இந்தப் புத்தகத்தை படிக்க முடியாமலிருக்கு... தமிழில மொழிபெயர்ப்புச் செய்ததை தேடிப்பிடிக்க வேண்டுவமெண்டால்... அதுவும் சரிவருகுதில்லை" என்றான்.

பொதுவான கனிவளங்களை தனிசொத்தாக்கிய முறைமைகளையும் மீண்டும் பொதுவுடைமையாக்கி, வர்க்க பேதமின்றி எல்லாரும் உழைத்துண்பதே முழுமையான வர்க்கபேதமற்ற கம்யூனிஸத்தைச் சென்றடையும் முதல்படியான, சோஷலிசமாகும்...

"கோபிக்காதேடப்பா குமரேசன! கொர்பச்சோவை நீ, புதிய லெனின் எண்டு போற்றிக்கொண்டு திரிகிறாய்... இந்த லெச்சணத்தில் அவருடைய மாபெரும் தவறை சுட்டிக்காட்டினால் நீ, ஏற்கப் போறதில்லையெண்டு தான்..." சின்னராசா வார்த்தையைமுடிக்கவில்லை. அதற்குள் தவம் தன் பங்குக்கு கேள்விகளைத் தொடுத்தான்.

"என்னடாப்பா! அப்படிப் பெரிய தவறு செய்துவிட்டார் கொர்பச்சோவ்; நம்முடைய கோர்பி?" ஆச்சரியமாகக் கேட்டான் தவம்.

"பெரிய தவறில்லைத் தவம்! மாபெரும் தவறு செய்கிறார் உங்கட கோர்பி."

"ஓய்... தவறு தவறென்று உளருகிறாய். அப்படி என்னதான் செய்துவிட்டார் கூறித்துலையன்"



"இஞ்ச பாருங்கடாப்பா! கம்யூனிஸத்தின் அடிப்படையே வர்க்கப்போராட்டம்தாம்; மார்க்ஸிஸம் சொல்லுகிறது வர்க்க போராட்டத்தினூடாக... அதாவது, தொழிலாளவர்க்கச் சர்வதிகாரத்தால் முதலாளித்துவச்சுரண்டல் ஆட்சியமைப்பைச் சிதறடித்து- சுரண்டப்பட்ட உழைப்பையும்;

"டேய்...டேய! நிறுத்து காணும். இது எங்களுக்கும் தெரியும். நாங்க கேட்டது, கொர்பச்சோவின்ர நடைமுறையைத்தான். ஆனால், நீ பாட்டுக்கு எங்கோவெல்லாம் போறாய்... ஆனா, ஆவன்னாவிலிருந்து துவங்கிறாயே!"

"கொஞ்சம் பொறடப்பா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குமரேசன்! எதுக்கும் நீ, இப்படித்தான். அவசரப்பட்டே காரியத்தைக் கெடுப்பாய். நான், ஆனா ஆவன்னாவிலிருந்து துவங்கவில்லை. அந்த அடிப்படையைச் சுட்டிக்காட்டி இன்றைய, உனது புதிய லெனின் தவறைப் புரிய வைக்கத்தான்..."

"சரிடப்பா சின்னராசா! கெதியாய் சொல்லு பாப்பம்" இது தவம்.

"பெறொஸ்ரோறோய்காவில் அவர் உலகத்துக்கு பிரகடனப்படுத்துகிறார் இப்படி "வர்க்கநலன்களுக்கு மேலாக அனைத்து மனித இனத்தினதும் பொது நலன்களுக்கு முன்னுரிமை" அதாவது, கொர்பச்சோவ் என்ன செய்யத்துணிகிறார் எண்டால் கம்யூனிச பொதுவுடமை பொருளாதாரமைப்பைப் படிப்படியாக சிதறியடித்து, முதலாளித்துவத்தை மீண்டும் மீள்விக்கப் பாடுபடுகிறார்: வர்க்கப் போராட்டத்தையும்; பாட்டாளிகளின் சர்வதிகார அரசையும் அவர்களிடமிருந்து பறித்தெடுத்து பழைய பூர்சவாக்களின் கைகளில் ஒப்படைக்கிறார் அல்லது, ஒப்படைத்துவிட்டார்.

மேற்சொன்ன விடயங்களை நியாயப்படுத்தத்தாம் பெறொஸ்ரோறோய்காப் எழுதினவர். இதனால், அவருடைய ஈனத்தனங்களாலும், பாட்டாளிய வகுப்பை முதலாளிகளுக்கு அடிமைப்படுத்துவதாலும் மீண்டும் முதலாளித்துவம், முழு உலகிலும் தலைதூக்கி விடும் என்று சுரண்டல் பெருச்சாளிகள் கருதுவதால் உன்னுடைய புதிய லெனின் (?) முதலாளித்துவ உலகால் புகழப்படுகிறார்; குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதியின் "சுப்பர் பார்ட்னர்" என்று நியூஸ்வீக் போட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறன்"

"கொஞ்சம் பொறு மச்சான்! " வர்க்க நலன்களுக்கு மேலாக அனைத்து மனிதஇனத்தினதும் பொதுநலன்களுக்கு முன்னுரிமை" என்ற கருத்து ஏன் உனக்கு தவறாகப்படுகிறது?; அதுமட்டுமல்ல, ருஷ்யாவில் இப்போது வர்க்கபேதமற்ற சமுதாயம்தானே இருக்கிறது. இதனால், முழு மனித இனத்தினதும் என்ற நிலையில்தானே பார்க்கவேணும்!" குமரேசன் தன் கருத்தில் நியாயம் இருப்பதாகக் கருதிக்கொண்டு இப்படியொரு அபத்தக் கேள்வியைக் கேட்டான்.

"அடேய் மண்டு! கொர்பச்சோவ், உலகம் முழுவதற்கும் தான்பெறொஸ்ரோறோய்காவைப் பிரகடனம் செய்கிறார்; அதுமட்டுமில்லை, ருஷ்யாவில் இப்போது ஆட்சிக்கட்டிலிருப்பவர்கள் பழைய பூர்சுவாக்களின் வழிமுறைகள்தான்ரா! கிரம்பிளின் அதிகாரத்துவத்தின் ஜி.பி.யு (G.P.U)_ கே.ஜி.பி(K.G.P) ஏஜென்டெல்லாம் பூர்ஷுவாக்களின் நலனை பிரதிநிதிப்படுத்துவதாகும். எனவே அங்கு, இன்னும் முழுமையான வர்க்க போர் நிறைவு பெறவும் வர்க்க பேதமற்ற சமுதாயமும் மலரவில்லை! வர்க்க பேதமற்ற சமுதாயம் மலருவதற்கு குமரேசா... பாட்டாளியவர்க்கம் முதலாளித்துவத்தை வெற்றிகொண்டு ஆட்சியை கைப்பற்றிய , பல நூற்றாண்டுகளுக்கு வர்க்கப்போரை முன்னெடுக்க வேணுமடாப்பா! அப்படி முன்னெடுத்துக் கொண்டு செல்லும் ஒரு சோஷலிச நாட்டில் தான் உண்மையான கம்யூனிஸம் மலரும். இந்த அடிப்படையில் பார்த்தால் அக்டோபர் புரட்சி மூலம் சோஷலிஸத்தை நிறுவிய தோழர் லெனினும் விமர்சிக்கப்படவேண்டியவர்..."

"என்னடாப்பா! நீ, சொல்லுறது ஒண்டும் விளங்க இல்லையடா சின்னராசா!" தவம் தன் நிலைமையை வெளிப்படுத்தினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எனக்கு விளங்குது மச்சான்! நீ, மேற்கொண்டு சொல்லு" குமரேசன் பெரிதாகப் புழுகினான்.

"உனக்கு என்ன புரிஞ்சுது அதை முதலில் சொல்லு!"

"டேய் சின்னராசா! நான் கேட்டது கொர்பச்சோவின்ர தவறுகளைச் சொல்லசொல்லித்தான்... நீயோ என்னென்னவோ எல்லாம் பிதற்றுகிறாய்... உந்தக்கண்றாவிகளை நான் காதில போடவில்லை. அவ்வளவுதான்!"

"குமரேசா! அதுதான், நான் சொன்னான் உனக்கு கொஞ்சம் பொறுமைவேணுமெண்டு... இப்ப இது உனக்கு கண்றாவிகளாயத் தெரியலாம்; அல்லது விளங்காமல் இருக்கலாம். ஆனால், கொஞ்சம் முயற்சி செய்யத் துணிந்துவிட்டால் எல்லாம் புரிஞ்சுவிடும்; வாழ்க்கையே இதுவாகிவிடும்." என்று கூறிக்கொண்டு சின்னராசா தவத்தை நோட்டமிட்டான், தவம் கட்டிலில் நீட்டிநிமிர்ந்து கொர்... கொர்... கொர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் காண்ட குமரேசன் பக்கத்து ரூமில் சினிமாப்படம் "ஆராரோ ஆரிவரோ" பார்க்கச் சென்றுவிட்டான்.

சின்னராசா மீண்டும் குறிப்பெடுக்கத் தொடங்கினான்.




பெண் விடுதலை வேண்டும் என்று மூலை முடுக்குகளிலெல்லாம் கொட்டி முழக்குகிறார்கள். இப்போது அவர்களுக்கென்றே ஒரு தனிரகமான சிகரெட் அறிமுகம்.

அதிசயம் என்னவென்றால் இந்த அறிமுகம் மேல் நாட்டில் அல்ல. கீழ் நாடாகிய இந்தியாவில்.

எந்த மேல் நாட்டுப் பெண்களைப் பார்த்து இவர்கள் காப்பியடிக்க விரும்புகிறார்களோ அவர்களே சிகரெட்டை இப்போது தூரத் தள்ளிக்கொண்டு இருக்கும் பொழுது — பழக்கத்தை விடுவதற்குப் படுதீவிரமாக முயன்று கொண்டிருக்கும் பொழுது — இங்கே இப்படி ஆகியிருப்பது பெரும் துர்ப்பாக்கியம்.

பெண்களுக்கென்றே தனிச் சிகரெட்டை அறிமுகப்படுத்தியிருக்கும் நிறுவனம், ஒரு பெரிய ஆய்வுக்குப் பிறகுதான் இந்தச் சிகரெட்டைச் சந்தையில் விற்பனைக்கு விட்டுள்ளது. அதாவது, நன்றாக விற்கும் நல்ல இலாபம் வரும் என்று கண்டு கொண்ட பின்புதான் செய்திருக்கிறார்கள். வாழ்க பெண் விடுதலை!

பெண்ணின் விடுதலையுணர்வையும், அடிமைநிலையையும் வழமைபோலவே திசைதிருப்பியும், கொச்சைப்படுத்தியும் வரும் விஷமத்தனத்தின் அப்பட்டமான முத்திரை இது.

பெண்விடுதலை என்பது மேற்குநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்ற போக்கிரித்தனமான பிரச்சாரம் இலங்கை, இந்தியா மற்றும் தென்னாசிய நாடுகளிலுள்ள ஆனாதிக்கப் பிற்போக்குவாதிகளால் இன்னமும் தூக்கிப்பிடிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இந்த துணுக்கை 'மஞ்சள்'பத்திரிகையான தினகரன் வெளியிட்டுத் திருப்திப்பட்டுக்கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னிய ஆக்கிரமிப்பும் எமது பொருளாதார சமூக வளர்ச்சியும்.

சமூகம் என்பது மக்கள் கூட்டம். சமூகத்தின் வளர்ச்சி என்பது அந்த மக்களின் வாழ்க்கை முறையில் காணப்படும் வளர்ச்சி. மக்களின் வாழ்க்கை முறையே அவர்களின் உணர்வுகளை- சிந்தனைகளை - தீர்மானிக்கின்றது. வாழ்க்கை முறைக்கு அடிப்படையாக அமைவது அந்த மக்கள் கூட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்திமுறைகள். இந்த உற்பத்தி முறைகளின் அடிப்படையிலேயே அந்த மக்களின் மத்தியில் காணப்படும் உறவுகள்- வாழ்க்கை முறை - உணர்வுகள், கலைகள், கலாச்சாரம் எல்லாம் வளர்ச்சியடைகின்றன.

இந்த வகையில் எமது சமூகத்தின் வளர்ச்சியை உலக வளர்ச்சியுடன் - அதாவது இலங்கை போன்ற ஒரு நாட்டின் வளர்சியை மேற்கத்திய நாடுகளின் வளர்ச்சியுடன் - ஒப்பிட வேண்டுமாயின் வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியை எமது நாட்டு உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுவது அவசியமாகிறது.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் சமூக வளர்ச்சிக்கு, முதலாளித்துவமும் அதன் உச்சக்கட்ட வளர்ச்சியான ஏகாதிபத்தியமும் அடிப்படையாக அமைந்திருப்பது போல எமது நாடுகளில் காணப்படும் சமூக பொருளாதார பின்தங்கிய நிலமைகளுக்கும் ஏகாதிபத்தியமே அடிப்படைக்காரணமாக அமைந்திருக்கின்றது.

உலகை ஆக்கிரமித்திருக்கும் தொழில்மயமான முதலாளித்துவப் பொருளாதாரம் இங்கிலாந்தில் உதயமாகியது. ஆரம்ப காலங்களில் போட்டிகளும் மூலதனக் குவிப்பும் இந்த அமைப்புமுறையில் முக்கியமாக இடம் பெற்றன. எமது நாடுகளில், சமூகத்தில் இன்று காணப்படும் சிறு முதலாளிகளின் மூலதனக் குவிப்பு நடவடிக்கைகள் - குறைந்த கூலி கொடுத்தல், பெண்களையும் குழந்தைகளையும் பாவித்தல், கடத்தற்தொழில்கள், குடும்பச் சொத்துக்களை குவித்தல் - போன்ற நடவடிக்கைகள் அன்றைய ஆரம்ப முதலாளித்துவ வளர்ச்சியில் இந்த நாடுகளிலும் காணப்பட்டன.

முதலாளித்துவ உற்பத்தி முறையானது, 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்கும் பின்பு ஜப்பானுக்கும் பரவியது. முதலாளித்துவ தொழில் வளர்ச்சியானது அதன் மலிவான உற்பத்திப் பொருட்களின் பெருக்கத்தினால், இந்த நாடுகளின் பழமையான குடிசைத் தொழில்களையும் சிறு உற்பத்தியாளர்களையும், தயவு தாட்சணியமின்றி அழித்தொழித்தது.

இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஆரம்ப முதலீடுகளைச் செய்த முதலாளிகள், தமது சொந்த நாடுகளிலேயே தொழில் வளங்களை அபிவிருத்தி செய்தன

கு.பரராஜசிங்கம்.

குடிசைத் தொழில்களையும் சிறு கைத்தொழிற்சாலைகளையும், நவீனமயமான தொழிற்சாலைகளால் மாற்றியமைத்து உற்பத்திகளைப் பெருக்கினர். ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ஸ்பெயின், ஆஸ்திரியா, ருசியா, ஒல்லாந்து ஆகிய நாடுகளில் - முக்கியமாக துணி உற்பத்தியில் - இந்த வளர்ச்சி இடம் பெற்றது.

ஆரம்ப காலங்களில் காணப்பட்ட மூலதனக் குவிப்பானது, உற்பத்தி முறைகளை மேலும் நவீனமயப்படுத்தியது. நவீன உற்பத்திமுறைகளுக்கு அதிக மூலதனம் தேவைப்பட்டதால், சிறிய ஸ்தாபனங்களின் மூலவளங்களையும் பெரிய ஸ்தாபனங்கள் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படங்களை தொடர்ந்தும் காண்பிக்கப்படவேண்டுமென கருத்து தெரிவிக்கப்பட்டது.

அடுத்து "எதிர்கால ஆலோசனைகள்" என்ற விடயத்தின் கீழ் போராட்டக்காலங்களில் பாதிக்கப்பட்டு இலங்கையிலிருக்கும் விதவைகளுக்கும், கற்பழிக்கப்பட்டவர்களுக்கும் நிதியுதவிசெய்யலாமெனவும், ஒரு வருடத்துக்கொருமுறை "மலர்" ஒன்று வெளியிடலாமெனவும், பெண்ஒடுக்குமறையைப் பற்றிய கலந்துரையாடல்கள் நடத்தலாமெனவும், ஒவ்வொரு நகரத்திலுமுள்ள பெண்களின் பிரச்சனைகளைத் தெரியபபடுத்துதல் போன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அதைத்தொடர்ந்து "இப்படித்தானே சகோதரிகளே!" என்ற சங்கமியில் வெளியான கவிதாபாரதியின் கவிதையொன்று வாசிக்கப்பட்டது.


உமா

கவிதைகளில் பெண்களை "நெல்லின் சாயல்", "மெல்லிடையாள்", "கயல்விழி" என உவமானச் சொற்களாக உபயோகிப்பது, கவிதையை அழகுபடுத்துவதற்கே, அவற்றை பெண்நிலைவாதப் பார்வையில் எதிர்க்ககூடாதென தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு, காலகாலமாகவே பெண்களைத் தாழ்த்தி, பெண்களை அழகுப்பொருட்களாக ஆண்களை கவர்வதற்காகவும், வியாபாரநோக்கத்திற்காகவுமே இவ்வாறு எழுதப்படுகின்றது என எதிர்கருத்து தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து ஒரு வருடத்துக்குரிய ஒன்பதுபேர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

அடுத்தச் சந்திப்பு ஆப்பெற்றால் நகரத்தில் நடைபெறுமென தீர்மானிக்கப்பட்டதையடுத்து நன்றியுரையுடன் அன்றைய சந்திப்பு முடிவடைந்தது.

இம்முறைச் சந்திப்பில் முதற்சந்திப்பை விடவும் குறைவான பெண்களே கலந்து கொண்டபோதிலும் காத்திரமாகவிருந்தது.



24 பக்கத்தொடர்ச்சி

நோக்கததிறகாக ஆளும் தரகு முதலாளிகளுடன் சமரசம் செய்யும். அரச அமைப்பு முறைகளை ஏற்போமாயின் அது பிரச்சனைகளுக்கு முடிவுகட்டப்போவதில்லை. அதுபோ "யெகோவா"வாதிகளின் பேச்சைக் கேட்டு மனித சமுதாயத்ததின் பிரச்சனைகளையும், அரசியல் விழிப்புணர்வையும் உள்வாங்கிக்கொள்ள மறுப்போமானால் முதலாளித்துவத்தின் திட்டம் வெற்றிதானே?

(முற்றும்)

7 பக்கத்தொடர்ச்சி

கம்யூனிசத்தின் உறுதியான வேர்கள் மூன்றாம் உலக நாடுகளில் தான் பதிடம். மூன்றாம் உலக நாடுகள்தாம், உலகத்துக்கு உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும் கொண்டு வந்து சேர்க்கும்.

மூன்றாம் உலக நாடுகள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களிலிருந்து கம்யூனிசம் மட்டுமே காப்பாற்றும். மூன்றாம் உலக மக்களின் கைகள்தான் அந்தச் செங்கொடியை உண்மையான பற்றோடு உயர்த்திப் பிடிக்கும்.

www.tamilarangam.net



# குருஷேத்திரத்திலிருந்து கம்யூனிசம் வரை



ப.வி.ஸ்ரீ ரங்கன்

(தை மாத இதழ் தொடர்ச்சி)

கிருஸ்துவ மத எழுத்தாளர் திரு கே.எம்.சென் இப்படிக் கூறுகிறார்:
"இப்படிப்பட்ட ஒரு போர் முன்னறிவிக்கப்படுகிறது. எந்தச் சமயத்திலும் தொடங்கலாமென்று லட்சக்கணக்கான ஆட்களால் எதிர்பார்க்கவும்படுகிறது. மனித வர்க்கத்துக்குள் இருக்கும் நிலைமைகள் இப்படிப்பட்ட ஒரு போர் தொடங்குவதற்குப் பக்குவமாய் முற்றியிருப்பவையாக இருக்கின்றன", இப்படிக் கூறிக்கொண்டு செல்லும் திரு.கே.எம்.சென், பின்பு பைபளை உதாரணம் காட்டி இறைவனே முன் நின்று இவ்விதப்போரை நடாத்திமுடிப்பான். என்கிறார்.

ஆனால், கம்யூனிஸம் என்ன சொல்கிறது...?

தொழிலாளி வர்க்கம் தனக்குள் பிளவுபட்டுச் சீரழியாமல் ஒன்றுபட்டு, வர்க்கப் போராட்டத்தினூடாக வர்க்கபேதமற்ற மானிட சமுதாயத்தை உருவாக்கச் செய்கிறது. இது யதார்த்தம்!; ஒரு உண்மை. ஆகவே-
இவற்றையெல்லாம் உற்றுநோக்கும் போது, குருசேத்திரத்திலிருந்து கம்யூனிசம் வரை மானிட வர்க்கததின் விடிவுக்கு "போர்தாம் தேவை" என்கின்றன. ஆனால், மதங்கள் ஏன் இறைவனே செய்து முடிப்பான் என்கிறன?
இன்றைக்கு மக்கள் மத்தியில் பிரபலமாகிய அனைத்து "மதங்களும்" முதலாளித்துவ பொருளாதார அமைப்பாலேயே உயிர்வாழுகின்றன: வாழ வைக்கப்பபடுகின்றன. முதலாளித்துவம் வாழ மதம் வாழவேண்டும். அதுபோல், மதம் வாழ முதலாளித்துவம் உயிர்வாழவேண்டும். இந்த நிலையில்... மாடாதிபதிகளும், மதபோதகர்களும் எந்தவித தொழிலும் புரியாமல் ஓசியில் உண்டு கொழுக்க முதலாளித்துவபொருளாதார அமைப்பு அவர்களுக்குத், தேவை! எனவே மானிட சமுதாயத்திற்கு "சங்கிலித் தொடர்போல" பிரச்சனைகளையும், துயரங்களையும் தோற்றுவிக்கும் முதலாளித்துவ அரச எந்திரத்தை மதவாதிகள் உடைத்தெறிய விரும்பவில்லை. அதே நேரத்தில் முதலாளித்துவ ஆட்சியால் மனிதவர்க்கத்திற்கு நிகழும் துன்பங்களை, மனிதவர்க்கமே போராடி நிவர்த்தி செய்வதை தடுப்பதற்கே மதவாதிகள், இறைவனே, அநீதியை எதிர்த்து போராடி மனிதவர்க்கத்தின் துன்பங்களை போக்குவான் என்று கூழகிறார்கள்.
ஆனால், இன்றைக்கு இவ்வித மதங்களின் போலித்தனங்களை மக்கள் புரிந்து கொண்டுவருகிறார்கள். இதனால், மக்களுக்கு மதங்களின் மீதும், அது கூறும் இறைவன் மீதும் வெறுப்பேற்பட்டு வருவதை எல்லா முதலாளித்துவவாதிகளும், முதலாளித்துவ ஏகாதிபத்தியமும் அறிந்து விட்டார்கள்: விட்டது.
முதலாளித்துவ அடிமட்ட பொருளாதார அமைப்பைக் காட்டிக்காக்கும் மேல் மட்ட அமைப்புகளில் மதமும் ஒன்று! இப்படிப்பட்ட பாதுகாப்புக் கவசம் மக்களால் இனம் காணப்பட்டு தகர்க்கப்படுமானல் முதலாளித்துவத்தின் வாழ்வு, அற்ப ஆயுளில் முடியும். இந்தச் சூழ்நிலையை அறிந்த முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் மீண்டும் ஒரு மதத்தை தோற்றுவித்து அம்மதத்தாலேயே ஏனைய, பழைய மதங்களையும் அதன் மனிதவிரோதச் செயல்களையும் கண்டித்து, புதிதாகத் தோன்றிய மதமே "கிருஸ்துவ மதத்தின் வேத நூலான பைபிள்" கூறும் உண்மையான மதமென்றும், அது(பைபிள்) கூறும் கடவுளான "யெகோவாவே" பைபிளிலுள்ள வசனங்களை கூறியவரென்றும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்படுகிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காஞ்சிக்காமக்கோடியிலிருந்து வற்றிக்கான்வரை விமர்சனம் செய்யும், மேற்கூறிய மதமான "யெகோவாவின் சாட்சிகள்" இன்று, ஜெர்மனியிலுள்ள அனைத்து தமிழரிடமும் வலுவாகத் தமது பிரச்சாரத்தைமேற்கொண்டு வருகிறார்கள்.

அமெரிக்கா, கிருஸ்துவ மதங்களுக்கூடாகவும், அமெரிக்கன்மிஷனிரிகளினூடாகவும் ஆயுத விநியோகம் செய்துவந்தது, முதலாளித்துவ ஆட்சியைப் பேணும் நாடுகளுக்கு!

உலகத்ததின் எந்தப் பாகத்திலும் உழைப்பாளிகளின் நீதிப்போர் கம்யூனிசத்தின் ஆட்சி மலர்வது தடுக்கப்படவேண்டும் என்பதற்காகவே அமெரிக்கா, மேற்கூறியபடி ஆயுத விநியோகம் செய்தது. இவ்வித ஈனத்தனங்களை மக்கள், தமது விழிப்புணர்வால் அறிந்து கொண்டதால் மதங்கள் மீது, தன்னிச்சையாக வெறுப்புக்கொண்டார்கள்: கோபமடைந்தார்கள்.

"இப்படி நிகழ்வது இயற்கைத்தானே நண்பர்களே?"

மக்களின், இவ்வித போக்கை அறிந்துகொண்ட ஏகாதிபத்தியம் எல்லா மதங்களையும் குறை கூறி, பைபிளை எந்த மதமும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்றும்; யெகோவாவின் சாட்சிகளே பைபிளைச் சரியாகப்புரிந்து கொண்டவர்களென்றும், பைபிளே மனித வர்க்கத்தினதும், புறஉலகத்தினதும் பிரச்சனைகளுக்கு முன்கூட்டியே தீர்வை வைத்துள்ளது என்று கூறி பிரச்சாரம் செய்கிறது, ஏகாதிபத்தியம். முன்கூட்டியே, எந்தக் கேள்விக்கும் பைபிளிலே பதிலுள்ளது என்று கூறுகிறார்கள், யெகோவாவின் சாட்சிகளென்று தம்மைக் கூறிக் கொள்ளும் மானிட விரோதிகள்.

முதலாளித்துவத்தின், காவல் நாய்களான யெகோவாவாதிகள் கூறுகிறார்கள். இன்று மக்களுக்கு தீங்கிளைக்கும் முதலாளித்துவ அரச அமைப்புகள் யாவும், பைபிள் கூறும் "சாத்தானின்" ஆட்சிக்கு உட்பட்ட அமைப்புகளாம்!

இந்த அமைப்புக்கு எதிராக உழைக்கும் பாட்டாளிகள் போராடாது, யெகோவாவை நம்பி அவர்மீது பழியைப்போடட்டாம். அப்படி, யெகோவாவை முழுமையாக நம்பி - விசுவாசமாக, அமைதியடைந்து வாழ்ந்தால் யெகோவாவே சாத்தானின் ஆணைக்குட்பட்டு கொடுங்கோல் அரச புரியும் முதலாளித்துவ ஆட்சி அமைப்பையும், துஷ்டர்களையும் போரிட்டு, அழித்து- நீதியுள்ள- தனது சாட்சிகளை பூமியில்- பரடைசியில் வாழவைப்பார், என்று கூறி பிதற்றித்திரிகிறார்கள். இவ்"யெகோவா"வாதிகள், தமது பிரச்சாரத்தந்திரத்தால் மேற்கு ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களில் பலரை தமது மதத்திற்கு சேர்த்து வருகிறார்கள். இந்த, யெகோவா மதக்காரர்கள் தமது மதத்தத்துவத்தால்- வாதங்களினால் மக்களைத் திசைதிருப்ப முடியாதுபோனால் "பண" உதவி செய்தாவது திசைதிருப்பி விடுகிறார்கள். உலகத்தைப்பற்றிய எந்தக் கேள்விக்கும் "பைபிளை"த் திறக்கும் இவ்விரோதக் கும்பலிடம் மக்கள், ஏமாந்து போவது துர்வதிஷ்டமே!

இவ்விதப்போக்கு, முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் தற்காலிக வெற்றியாகும்.

எனவே-

மானிட வர்க்கத்தினது, சகல துன்பங்களுக்கும்- சுரண்டல் ஆட்சிமுறையே காரணமாகும். இதைச் சகல மதங்களும் தெரிந்திருந்தும் மக்களுக்கு, மறைத்து வருகின்றற. ஆகையினால் மானிட சமுதாயத்தில் புதிது, புதிதாக முளைத்து வளரும் சகல மதங்களும், கோட்பாடுகளும் "முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு முறையை" காப்பதற்கே உருவாக்கப்படுகின்றன. இதை மனித நல விரும்பிகள் புரிந்து கொள்வார்களா? கடைசியாக-

மானிட சமூகத்தில் உள்ள முரண்பாடுகளையும், ஏற்றதாழ்வுகளையும் உண்மையில் அகற்ற வேண்டுமாயின் உலகத்தை மாற்றியமைக்க வேண்டும். இதற்கு, மதங்கள் இறைவனை நம்பும்படியும் "அவனே" உலகை மாற்றுவான் என்றும் கூறுவதை நம்பி உழைக்கும் மக்களாகிய நாம் ஏமாறக்கூடாது! கம்யூனிசம் ஒரு வாழ்க்கை: ஒரு மனநெறி! அதன் முதற்படியே சோஷலிசம். இவ்வுண்மையைப் புரிந்து கொண்டு இலங்கை மக்களாகிய நாம், இன, மொழி, மத, ஜாதி வேறுபட்டால் பிளவுபட்டு சீரழியாமல் முழு இலங்கையின் உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்தி, ஆளும் தரகு முதலாளித்துவ இனவாத, அரசஜந்திரத்தை உடைந்தெறிந்து சோஷலிச ஜனநாயக இலங்கை அரசை நிறுவப் போராட வேண்டும். இவற்றை விட்டு, குறுகிய

22 பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாசகர் கடிதங்கள்

அன்பான தேனீ ஆசிரியர் குழுவினருக்கு,

எனது வணக்கங்களும் வாழ்த்துக்களும்!

பல மாத காலமாக தேனீ என்னை நோக்கி பறந்த வண்ணம் இருக்கின்றது. எப்படி என்னை மோப்பம் பிடித்தனவோ தெரியவில்லை. எப்படியோ எனது நன்றியினைச் சொல்லித்தானேயாக வேண்டும்

ஆம். எனது நன்றியையும் ஆதரவையும் கொடுத்தனுப்புகிறேன்.

தேனீ கொண்டுவருவனவெல்லாம் தித்திப்பான தேன் மட்டுமல்ல. கசப்பான மருந்துகளையும் கொண்டு வருகின்றன. இதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பிடித்த முயலுக்கு மூன்று கால் என எண்ணுபவருக்கு நாலு கால் என்ற உண்மையைக் கூறினால் கசப்பாகத்தானே இருக்கும். உள்ளதை உள்ளபடி எழுதுவதும், சூழ்நிலை, காவநிலை, உள்நாட்டு வெளிநாட்டு அரசியல், மக்களின் விருப்பு, நிலைப்பாடு, அரசியல்வாதிகளின் குணாம்சம் யாவற்றையும் சரியாகக் கணக்கிட்டு நாளை நடக்கப்போவதை துல்லியமாக எடுத்துக்காட்டுவதும், நாட்டுக்கு வரவிருக்கும் அபாயங்களை எச்சரிப்பதும், கண்டிப்பதும் நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவோரை ஊக்கப்படுத்துவதும், மக்களுக்கு நல்ல விடயங்களை புரியக்கூடிய வகையில் எடுத்துக் கூறுவதுவும் தரமானதொரு பத்திரிகையின் கடமையாகும்.

அதனாலேதான் தேனீயின் ஆக்கத்தில் இனிப்பு மட்டுமல்ல, கசப்பு மருந்தும் உண்டென்றேன். இந்த சுவை வேறுபாட்டால் கூட்டில் உள்ள தேனீக்களும் பிரிந்து செல்ல வாய்ப்புண்டு. அதையிட்டு கவலையடையாது மகிழ்ச்சியடைவதுதான் சிறந்தது. பிரிந்து சென்ற தேனீக்களைத் திருப்திப்படுத்த முனைவது ஆரோக்கியமான வழியல்ல. இனிப்பு இனிப்பாகவும், கசப்பு கசப்பாகவும், உறைப்பு உறைப்பாகவும் இருந்தால் தான் அவ்வுணவு சுவைக்கும்

பத்திரிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடிய எனக்குத் தெரிந்த சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளேன்.

எனது கருத்துக்களை ஏற்கனவே நீங்கள் கொண்டிருக்கவில்லையென்றும் கூறமுடியவில்லை. தேனீ நல்ல முறையில் வளர வேண்டும் என்ற விருப்பில் எனது கருத்தையும் தெரிவிக்கிறேன். அவ்வளவுதான்

தேனீயின் வளர்ச்சிக்கு எனது ஆதரவுகளையும் வாழ்த்துக்களையும் கூறி விடைபெறுகிறேன்.

முன்சன் க.கணேஸ்வரன்

அடடைபபடம நறை :A IASTI OF B. RNESS

www.tamilarangam.net

**To: Subscribers to "THISAI"**

Dear Subscriber,

We regret to have to inform you that due to compelling reasons and circumstances beyond our control we have to stop publication of "THISAI" abruptly as from 1st June, 1990.

If and when it is possible to recommence publication we shall notify you.

We take this opportunity to thank you for the kind co-operation and good-will you have shown us so far.

Thank you.

Yours sincerely

Circulation Manager

யாழ்ப்பாணத்தில் வெளியாகி வந்த "திசை" பத்திரிகை வெளியீட்டாளர்கள் "தவிர்க்க முடியாத" காரணங்களினால் தமது பத்திரிகையை நிறுத்திக் கொள்வதாக சந்தாதாரர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இன்று திசையறியாதிருக்கும் "திசை"க்கும் தலையங்கம் எழுதமுடியாதிருக்கும் "தாயகத்தி"ற்கும் ஜனநாயகத்திற்கும் ஆயுதசர்வதிகாரத்திற்குமிடையிலான வித்தியாசம் தற்பொழுதாவது விளங்கியிருக்கும் என்றே எண்ணுகின்றோம்.

**தேனீ**

இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது.

ஆசிரியர்குழு தேனீக்கள்

தனி இதழ் 3டி.எம்

வருடசந்தா 20டி.எம்

ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத் தொடர்புகளுக்கும்.

**THENEE**

Im Wachholder 11,

7151, ALLMERSBACH im TAL.

Buch:THENEE

Sparkonto Nr: 49435418

Bankleitzahl: 60261818

RAIFFEISEN BANK WEISSACHER TAL EG

7151, ALLMERSBACH im TAL

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்